புதுவை அரசு
முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகம், புதுச்சேரி
பெருந்தலைவர் காமராஜர் கல்வித்துறை வளாகம்
புதுச்சேரி
****

ஒப்பந்தப் புள்ளி மற்றும் ஏல அறிவிப்பு

எண். 567/CEO/DIS-IV/A1/24-25/489 தேதி: 29.08.2024

புதுவை அரசு, பள்ளி கல்வி இயக்குனரகம், வட்டம் நான்கிற்கு உட்பட்ட ஒதியம்பட்டு அரசு தொடக்கப்பள்ளியிலுள்ள தென்னை மற்றும் மா மரங்களின் மகசூல் அனுபவ / குத்தகை உரிமத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

மா – 3 மரங்கள்
தென்னை – 30 மரங்கள்

குத்தகைக் காலம் : ஒரு வருடம்
(ஏலம் எடுத்த நாள் முதல்)

விதிமுறைகள்:

1. அரக்கினால் முத்திரையிடப்பட்ட உறையின்மேல் தென்னை மற்றும் மாமரங்களின் மகசூலுக்கான ஒப்பந்தப்புள்ளி எனக் குறிப்பிட்டு, முதன்மைக் கல்வி அதிகாரி, பள்ளி கல்வி இயக்குனரகம், புதுச்சேரி என்ற முகவரிக்கு 06.09.2024 அன்று மாலை 3.00 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் யாவும் அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு நேரில் வரும் ஒப்பந்தாரர்களின் முன்னிலையில் முதன்மை கல்வி அதிகாரியால் அவரது அலுவலகத்தில் பிரிக்கப்படும். மேற்கண்ட நாள் அரசால் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் அடுத்து வரும் அலுவலக நாளில் அதே நேரப்படி ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுத் திறக்கப்படும். அப்படி திறக்கப்படும் ஒப்பந்தப் புள்ளிகளில் அதிகத் தொகையாக கோரப்படும் ஒப்பந்தாரருக்கே குத்தகை / ஏலம் விடப்படும்.
2. ஒப்பந்த / ஏல நிகழ்ச்சியில் பங்குபெறும் ஒப்பந்ததாரர்கள் குறித்த காலத்தில் ஒப்பந்தப் புள்ளி உறையை சமர்பிக்க வேண்டும். மேலும் ஏலம் கோறும் நாளன்று ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) செலுத்த வேண்டும்.
3. வெற்றி பெறாத ஒப்பந்ததாரர்களின் முன்காப்புத் தொகை ஏலம் முடிந்தவுடன் திருப்பித்தரப்படும்.
4. மேலே குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் யாவும் நிராகரிக்கப்படும்.
5. யாதொரு காரணமுமின்றி எந்தவொரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டுள்ளவரகக்கு முழு உரிமை உண்டு.
6. ஒப்பந்த நிகழ்ச்சி முடிந்தபின் குத்தகை விடப்பட்ட மரங்களின் மகசூல் பற்றி இந்த அலுவலகம் எந்தவிதமான பொறுப்பும் ஏற்காது. குத்தகைக் காலம் முடிந்தவுடன் அனைத்து மரற்களையும் பொறுப்பான அலுவலரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட வேண்டும்.
7. ஒப்பந்தப் புள்ளியைப் பெறுவதற்கான காலக்கெடு முடிவடைந்த பின்பும், ஒப்பந்த முறை முடிவு அறிவித்த பின்பும், அதனை திரும்பப் பெறுவது ஏற்க இயலாது.
8. மேற்கண்ட 30 தென்னை மரங்கள் மற்றும் 3 மாமரங்கள் ஆகியவற்றின் மகசூல் பொருட்களான தேங்காய் மற்றும் மாங்காய் ஆகியவற்றை குத்தகைத்தாரர் அனுபவித்துக் கொள்ள உரிமை உண்டு. எக்காரணத்தைக் கொண்டும் பசுமையான தென்னை மட்டைகளையோ, மாங்கிளைகளையோ வெட்டக் கூடாது.
9. மேற்கூறிய தென்னை மரங்களிலிருந்து எக்காரனத்தைக் கொண்டும் கள்(மது) இறக்கக் கூடாது.
10. குத்தகைதாரர் மரங்களுக்குத் தேவையான பாதுகாப்புக் கருதி தாங்களே காவல் போட்டுக் கொள்ள வேண்டும்.
11. மேலே குறிப்பிட்ட மரங்களை அரசினரால் வெட்ட நேரிட்டால் அதுசமயம் குத்தகைதாரர் மறுப்பு ஏதும் கூறாமல் மரத்தை வெட்ட அனுமதிக்க வேண்டும்.
12. அவ்வாறு வெட்டப்பட்ட மரங்களுக்கு ஈட்டுத் தொகை ஏதும் வழங்கப்படமாட்டாது.
13. குத்தகையைக் குறிப்பிட்ட காலத்திற்குள் தானாகவே ரத்து செய்ய நேர்ந்தால் அதனால் ஏற்படும் இழப்பிற்கு துறை பொறுப்பேற்காது.
14. இதில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் குத்தகைக்கு விடப்படும் மரங்களை வேலை நாட்களில் பார்வையிடலாம்.
15. ஒப்பந்தாரர் எடுத்த முழுத் தொகையையும் அதற்குண்டான சரக்கு விடப்படும் மரங்களை வேலை நாட்களில் பார்வையிடலாம்.
16. இந்த குத்தகை/ஏலம் சம்பந்தரமாக, கீழே கையொப்பமிட்டுள்ளவரின் முடிவே இறுதியானது.

S Mohan 29/8/24
முதன்மைக் கல்வி அதிகாரி
பள்ளி கல்வி இயக்ககம், புதுச்சேரி

நகல் பெறுபவர்:

1. தலைமையாசிரியர்
அரசு தொடக்கப்பள்ளி, ஒதியம்பட்டு.
2. மின்னனு தரவு செயலாக்கம்,
பள்ளி கல்வி இயக்ககம், புதுச்சேரி.
3. அறிவிப்பு பலகை.